# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-9 • Issue-9 • ஜுலை-2026 • July -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




## வளர்ச்சி பாதையில் செல்கிறதா தமிழ்நாடு?



## காளியின் இருள் சக்தி ரகசியங்கள்

காவல் ஆணையர் Dr.A.அமல்ராஜ் IPS அவர்களின் உத்தரவின் பேரில்...

## அழிக்கப்பட்ட 2,449.37 கிலோ போதைப்பொருள்



## காவலர்களுக்கு 8 மணி நேர பணி ?



உடல் நலன் காக்கும் முருங்கை



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



அதிர்ஷ்ட மழையில் நனையப்போகும் 5 ராசிகாரர்கள்..

# அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

**ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**

எண்.30/2, சஹாய மாதா கோவில் தெரு, மலையடிவாரம், பொன்மலை,
திருச்சி – 620004 ✆ 98948 90808




**AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU**

Affiliated to :

**AEROSKATOBALL FEDERATION OF INDIA**

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

ஜூலை 2026 மலர் 11 இதழ் 9



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M. சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன், N.முரளிதரன்

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன், P.மணிமாறன், A.R.முருகேசன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோகன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ்கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ்அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்டபிரபு, A.லியோகிளமன்ட், S.அன்வர்தீன், L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜாராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபால கிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்( எ )பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வநயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார், C.A.செந்தில்நாதன், S.பாஜி, G.முகமது அன்சாரி, முகமது தாவூத் ஹுசேன், K.ரஞ்சிதா, U.விவேகானந்த், J.N.குருமூர்த்தி, T.ஞானசேகரன், S.முரளி, K.ரஞ்சிதா



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only


● தலையங்கம்




# வளர்ச்சி பாதையில் செல்லுமா தமிழ்நாடு?

*தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல அனைத்து துறைகளையும் துறை ரீதியாக சீரமைக்கும் பணியில் முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமையிலான 2 நாள் மாநாடு கடந்த ஜூன் மாதம் தலைமைச் செயலகத்தில் நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.*

*இந்த மாநாட்டில், தமிழகத்தில் உள்ள IAS, IPS, IFS போன்ற உயர் பதவிகளில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அனைத்து துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.*

*இதில், தமிழ்நாட்டில் பெண்கள், குழந்தைகள், மாணவ–மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு, சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் பாதுகாப்புடன் செயல்படுதல், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதுடன் தமிழகத்தை வளர்ச்சி பாதையில் வழிநடத்த அனைத்து துறை அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை பற்றி விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.*

*தமிழ்நாட்டில் ஊழல் அற்ற நேர்மையான ஆட்சி நடத்தி, தமிழகத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தி வேலை வாய்ப்புகளை உருவாக்கி தொழில் வளர்ச்சி பெற்று வன பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தூய்மை, சுகாதார மேம்பாடு, கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளின் வளர்ச்சி குறித்து தீவரமாக விவாதிக்கப்பட்டது.*

*மேலும், போதைப்பொருட்கள் உபயோகத்தால் இளைஞர்கள் மற்றும் மாணவ, மாணவிகளின் உடல் நலம், மனநலம், பாதிப்படையாமல் பாதுகாக்க அமைச்சர்களும் அந்தந்த துறை சார்ந்த அதிகாரிகளும் முனைப்புடன் நேர்மையாக செயல்பட்டு நாடும் நாட்டு மக்களும் வளம் பெற சிறப்பாக பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.*

*அனைவரும் முனைப்புடன் செயலாற்றினால்தான் தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் வழிநடத்த முடியும் என முதல்வர் ச.ஜோசப் விஜய் அவர்கள் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

**ஆசிரியர்**

## இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.




கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை காவல் நிலைய குற்ற எண் 20/2018, கொலை வழக்கில், குற்றம் நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றம் குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் ரூ.10,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. இதுதொடர்பாக இப்பணியை பாராட்டும்பொருட்டு, விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.மி.அருள்பிரகாஷ், அவர்களையும் மற்றும் வழக்கு சார்ந்த பணிகளில் சிறப்பாக பணியாற்றிய திருமதி.செ.சுதா, தலைமைக் காவலர் 3082, அவர்களையும் திருநெல்வேலி சரக அலுவலகத்திற்கு வரவழைத்து DIG Dr.இரா.திருநாவுக்கரசு IPS அவர்களால் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.




கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 01/2021, போக்சோ வழக்கில், குற்றம் நிரூபிக்கப்பட்டு, நீதிமன்றம் குற்றவாளிக்கு 32 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.14,000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது. இது தொடர்பாக இப்பணியை பாராட்டும்பொருட்டு விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திருமதி. கு.அந்தோணியம்மாள் அவர்களையும் மற்றும் வழக்கு சார்ந்த பணிகளில் சிறப்பாக பணியாற்றிய திருமதி.நா.கவிதா, தலைமைக்காவலர் 817, அவர்களையும் திருநெல்வேலி சரக அலுவலகத்திற்கு வரவழைத்து DIG Dr.இரா.திருநாவுக்கரசு அவர்களால் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி

# ஆரோக்கியமான முதுமைக்கான யோகா எவை?

## திருச்சி பொன்மலையில் நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவில் யோகா ஆசிரியர் விஜயகுமார் உரை



திருச்சி மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் Dr.எம்.எஸ்.உதயமூர்த்தி, தண்ணீர் அமைப்பு சார்பில் திருச்சி பொன்மலை ஆர்மரிகேட் அருகில் பொன்மலை ரயில்வே தொழிலாளர்கள் மற்றும் பாரதி நாடக சபா உறுப்பினர் கள் ஒன்றிணைந்து, அமைத்த மகாத்மா காந்தி சிலை முன்பு சர்வதேச யோக தினம் நடைபெற்றது.

மக்கள் சக்தி இயக்க மாநிலப் பொருளாளர் கே.சி.நீலமேகம் தலைமை வகித்தார். டீசல் பணிமனை மேற்பார்வையாளர், ஆர்.நாகநாதன், டீசல் சீனியர் தொழில்நுட்பர் எம்.ராஜதுரை, அரிமா பழனி, மேனாள் ரயில்வே சுவாமிநாதன், முத்துகுமார் உள்ளிட்டோர் முன்னிலையில், அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமார் பேசினார்.

அவர் தெரிவித்ததாவது, “சர்வதேச யோகா தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. 2026 ஆண்டின் 12–வது சர்வதேச யோகா தினத்தின் முக்கியக் கருப்பொருள் “ஆரோக்கி யமான முதுமைக்கான யோகா”. ஆரோக்கி யமான முதுமைக்கு யோகா மிகச்சிறந்த வரப் பிரசாதமாகும்.

இது மூட்டு வலி, தசை இறுக் கம், சமநிலை இழப்பு போன்ற வயதான கால பிரச்சினைகளைத் தடுத்து, உடலையும் மனதை யும் ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவு கிறது.” எனக்கூறி அஷ்டாங்க யோகா நூலை வழங்கினார்.

வயது முதிர்ந்தவர்கள் அதிக சிரமமின்றி செய்யக்கூடிய சில எளிய ஆசனங்கள் உள்ளன.

### தாடாசனம்

இது உடலின் சமநிலையை மேம்படுத்துகிறது மற்றும் கால்களை வலுப்படுத்துகிறது.

### பத்மாசனம் அல்லது சுகாசனம்

தரையில் அமர்ந்து செய்யும் இந்த எளிய ஆசனங்கள் முதுகெலும்பை நேராக்கி, மன ஒருமுகப்பாட்டைத் தருகின்றன.

### புஜங்காசனம்

முதுகுவலியைக் குறைத்து, நெஞ்சுப் பகுதியை விரிவடையச் செய்வதால் சுவாச ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

### சேதுபந்தாசனம்

இடுப்பு மற்றும் முதுகுத் தண்டுவடத்தை நெகிழ்வாக வைத்திருக்க உதவுகிறது.

### சவாசனம்

முழு உடலையும் மனதையும் தளர்த்தவும், ஆழ்ந்த ஓய்வுக்கும் இது உதவுகிறது.

### மூச்சுப் பயிற்சிகள் (பிராணாயாமம்)

மூச்சுக்குழாய் ஆரோக்கியத்தையும், மன அமைதியையும் மேம்படுத்த பிராணாயாமம் மிகவும் அவசியம் ஆகும். நாடி சுத்தி பிராணயாமம் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும், உடலுக்குத் தேவையான ஆக்ஸிஜனை சீராக வழங்கவும் உதவுகிறது.

### பிரமரி பிராணாயாமம்

மன அழுத்தம், கவலை ஆகியவற்றைப் போக்கி, நல்ல உறக்கத்திற்கு வழிவகுக்கிறது. யோகாவின் நன்மைகள் என எடுத்துக் கொண்டால் மூட்டுகளின் நெகிழ்வுத்தன்மையை அதிகரித்து, மூட்டு வலியைக் குறைக்கிறது. நரம்பு மண்டலத்தைச் சீராக்கி, அமைதியான மனநிலையைத் தருகிறது.



# அதிர்ஷ்ட மழையில் 5 ராசிகள்

ஜூலை 2026 மாதத்தில் சில ராசிக்காரர்களுக்கு கிரகங்களின் சஞ்சாரம் மிகவும் சாதகமாக அமைகிறது. தொழில், வேலை, வருமானம், குடும்ப வாழ்க்கை, முதலீடு, பதவி உயர்வு என பல்வேறு துறைகளில் முன்னேற்றம் காணும் வாய்ப்பு இந்த 5 ராசிக்காரர்களுக்கு அதிகமாக உள்ளது. ஜூலை மாதத்தில் அதிர்ஷ்டம் முழுமையாக கை கொடுக்கப்போகும் அந்த ராசிகள் யார்? அவர்களுக்கு கிடைக்கவுள்ள பலன்கள்

**கும்பம்**

ஜூலை மாதத்தில் கும்ப ராசிக்காரர்களுக்கு கிரக அமைப்பு மிகவும் சாதகமாக அமைகிறது. நீண்ட காலமாக தடைபட்டிருந்த வேலைகள் வெற்றிகரமாக நிறைவேறும். வருமானத்தில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்படும். சமூக அந்தஸ்து மற்றும் மரியாதை அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் முழு ஆதரவும் கிடைக்கும். புதிய வருமான வாய்ப்புகள் உருவாகி நிதி நிலை வலுப்பெறும்.

**துலாம்**

துலாம் ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் சாதனைகள் நிறைந்த காலமாக இருக்கும். தொழில் மற்றும் வேலை தொடர்பாக எதிர்பார்த்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உங்கள் ஆலோசனைகள் மதிப்பு பெறும். நிதி நிலை வலுப்பெறும். ஏற்கனவே செய்த முதலீடுகள் நல்ல லாபத்தை தரும். புதிய முதலீடுகளுக்கும் சாதகமான சூழல் அமையும். மாணவர்கள் கல்வி, போட்டித் தேர்வு மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியைப் பெற வாய்ப்பு அதிகம்.

**மீனம்**

மீன ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் புதிய தொடக்கங்களை வழங்கும். நீண்ட நாட்களாக வேலை தேடி வந்தவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. பணியிடத்தில் அங்கீகாரம், புதிய பொறுப்புகள் கிடைக்கும். பிறருக்கு கொடுத்திருந்த பணம் திரும்ப கிடைக்கும். நிதிநிலை கணிசமாக உயரும். இந்த மாதத்தில் மேற்கொள்ளும் பயணங்கள் லாபகரமான பலன்களை தரும். புதிய வாய்ப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் பல முன்னேற்றங்களை தரக்கூடிய காலமாக அமைகிறது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்கும் வாய்ப்பு அதிகம். பணியிடத்தில் உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உயரதிகாரிகளின் ஆதரவால் சவால்களை எளிதாக சமாளிப்பீர்கள். தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். வருமானத்தை அதிகரிக்கும் புதிய வாய்ப்புகள் உருவாகும். சமூகத்தில் உங்கள் மதிப்பும், செல்வாக்கும் உயரும்.

**தனுசு**

தனுசு ராசிக்காரர்களுக்கு ஜூலை மாதம் நிதி ரீதியாக மிகவும் சாதகமானதாக இருக்கும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் கைக்கு வந்து சேரும். பழைய பாக்கிகள் வசூலாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வாழ்க்கைத்துணையுடன் புரிதலும், அன்பும் அதிகரிக்கும். குடும்பத்துடன் சுற்றுலா செல்லும் வாய்ப்பும் உருவாகும். தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும்.

### மேஷராசி அன்பர்களே!




எடுத்த முடிவில் பின் வாங்காத அதே வேளையில் கருத்தும் கண்ணுமாக இருக்கும் மேஷ ராசி அன்பர்களே இந்த மாதம் மற்றவர்களுடன் இருந்த பகை மாறும். முடங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பார்கள். மனதில் இருந்து வந்த சஞ்சல மனநிலையில் மாற்றம் இருக்கும். தரும சிந்தனை உண்டாகும். பண நெருக்கடி குறையும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூல் செய்வதில் வேகம் இருக்கும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம். கணவன் மனைவிக்கு இடையே இருந்த குழப்பங்கள் நீங்கும். பெண்களுக்கு பணத் தேவை பூர்த்தியாகும். நெருக்கடியான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கலைத்துறையினருக்கு மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போதும் வெளியூர்களுக்கு செல்லும் போதும் கூடுதல் கவனம் தேவை. சூரியன் சஞ்சாரத்தால் முன் கோபம் ஏற்பட்டு அதனால் வீண் தகராறு ஏற்படலாம். நண்பர்கள் உறவினர்களுடன் கவனமாக பேசி பழகுவது நல்லது. மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சக மாணவர்களின் ஒத்துழைப்பு மனதிருப்தியை தரும்.

**தெய்வம்: விநாயகர், ஸ்லோகம்: கணபதி ஸ்துதி, பரிகாரம்: துர்க்கை அம்மனை தரிசிப்பது, சந்திராஷ்டமம்: ஆடி 7 (23/07/26) வியாழக்கிழமை இரவு 10.35 மணி முதல் 10 (26/07/26) ஞாயிற்றுக்கிழமை காலை 10.03 மணி வரை.**

### ரிஷப ராசி அன்பர்களே!




நேரத்தை உயிருக்குச் சமமாக மதிக்கும் ரிஷப ராசி அன்பர்களே நீங்கள் தனியாக இருக்க விரும்பாதவர்கள். மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை உண்டாகி அவர்களுடன் பகை ஏற்படலாம். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் டென்ஷனுடன் காணப்படுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனவேதனையில் இருந்து தெளிவான நிலை ஏற்படும். குடும்பத்தில் இருப்பவர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படும். சிற்றின்ப சுகம் குறையும். பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும் பயணங்களின் போதும் கூடுதல் கவனம் தேவை. நண்பர்கள் உறவினர்களிடம் சிறு மனத்தாங்கல்கள் வரலாம். பெண்களுக்கு எந்த இக்கட்டான சூழ்நிலையையும் மனஉறுதியுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். கலைத் துறையினருக்கு எந்த விவகாரத்தில் சிக்கினாலும் சாமர்த்தியமாக மற்றவரை முன் நிறுத்திதான் தப்பித்துக் கொள்ள வேண்டி வரும்.

ராசிநாதன் சுக்கிரனின் சஞ்சாரத்தால் நல்ல பலன்களே வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேரிடும். சாதுர்யமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். அதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்க பெறுவீர்கள். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை ஏற்படும். பாடங்களில் கவனம் செலுத்தி படிப்பது நல்லது.

**தெய்வம்: பெருமாள், மகாலெக்ஷ்மி, ஸ்லோகம்: நாலாயிர திவ்ய பிரபந்தம, பரிகாரம்: ஸ்ரீரங்கநாதரை வணங்க பாவங்கள் நீங்கும், சந்திராஷ்டம தினங்கள்: ஆடி மாதம் 10ம் தேதி 26/07/26 ஞாயிற்றுக்கிழமை காலை 10.04 மணி முதல் ஆடி மாதம் 12ம் தேதி 28/07/26 செவ்வாய் கிழமை இரவு 9.35 மணி வரை.**

### மிதுன ராசி அன்பர்களே!




நிதானமாக எந்த முடிவையும் எடுக்கும் மிதுன ராசி அன்பர்களே நீங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்பவர்கள். இந்த மாதம் பண வரத்து மன மகிழ்ச்சியை தரும். நீண்ட நாட்களாக இருந்த பிரச்சனை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். எந்த ஒரு காரியமும் சாதகமாக முடியும். விருப்பமானவர்களுடன் சந்திப்பு ஏற்படும். சுக்கிரன் சஞ்சாரத்தால் வாக்கு வன்மையால் நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, வீண் அலைச்சல் குறையும். எதிர்பார்த்த அதிகாரம் அந்தஸ்து கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். கணவன், மனைவிக்கு இடையில் நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். கையில் காசு புரளும். கலைத்துறையினருக்கு உடன் பணிபுரிபவர்கள் வீண் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எனவே கவனமாக இருப்பது நல்லது. சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். அரசியல் துறையினருக்கு முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். வீண் பகை ஏற்படலாம். ராசியாதிபதி புதன் ராகுவுக்கு திரிகோணம் பெறுவதால் மற்றவர்களுக்காக பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் நீங்கும். எதிர்காலம் பற்றிய திட்டம் தோன்றும். ஆசிரியர்களின் உதவி கிடைக்கும்.

**தெய்வம்: பைரவர், ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம், பரிகாரம்: ஸ்ரீநரசிம்மரை தரிசிக்கவும், சந்திராஷ்டமம்: ஆடி 1 (28/07/26) செவ்வாய்க்கிழமை இரவு 9.36 மணி முதல் 15 (31/07/26) வெள்ளிக்கிழமை காலை 7.37 மணி வரை**

### கடக ராசி அன்பர்களே!




ரத்த சம்பந்த உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசி அன்பர்களே நீங்கள் தலைமை தாங்குவதில் வல்லவர்கள். இந்த மாதம் கோபம், வேகம் இருக்கலாம். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வது நன்மை தரும். எந்த நெருக்கடிகளையும் சமாளிக்கும் தெம்பு வரும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் சுமையாக வரும். நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்ப விவகாரங்களில் சாமர்த்தியமாக நடந்து கொண்டு எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசுவது கருத்து வேற்றுமை ஏற்படாமல் தடுக்கும். பிள்ளைகளிடம் கோபமாக பேசாமல் அன்பாக பேசுவது நல்லது. பெண்களுக்கு அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். நீண்ட தூர தகவல்கள் நல்லவையாக இருக்கும். எதிலும் நிதானம் தேவை. கலைத்துறையினருக்கு முன்னேற்றம் சீரான பாதையில் இருக்கும். எடுத்த பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். திறமை வெளிப்படும். வெளிநாட்டு பயணங்கள் ஏற்படும். அரசியல் துறையினருக்கு உங்களை பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். ஒப்பந்தங்கள் நல்ல முறையில் வரத்து இருக்கும். மரியாதையும் அந்தஸ்தும் கூடும். மாணவர்களுக்கு பதற்றம் கொள்ளாமல் நிதானமாக பாடங்களை படிப்பது நல்லது. சக மாணவர்களால் அனுகூலம் உண்டாகும்.

**தெய்வம்: நரசிம்மர், ஸ்லோகம்: நரசிம்மர் ஸ்லோகம், பரிகாரம்: ஸ்ரீகாளியம்மன் வழிபாடு, சந்திராஷ்டமம்: ஆனி 19 (03/07/26) வெள்ளிக்கிழமை இரவு 12.00 மணி முதல் 22 (06/07/26) திங்கள்கிழமை காலை 7.22 மணி வரை.**




**சிம்ம ராசி அன்பர்களே!**

தனது தோரணையால் அனைத்து காரியங்களையும் சாதிக்கும் திறன் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே நீங்கள் பொறுமையைக் கடைபிடித்தால் அனைத்து காரியங்களிலும் வெற்றிதான். இந்த மாதம் தடைபட்டிருந்த பண வரத்து வந்து சேரும். உடல் ஆரோக்கியம் சீராகும். அதிக கோபத்தால் வீண் பகை உண்டாகலாம். ஆடம்பர செலவுகளை ஏற்படுத்தும். வாகனம் மூலம் செலவு உண்டாகலாம். பயண சுகம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பண உதவி கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணி காரணமாக உடல் சோர்வு உண்டாகலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வதன் மூலம் மன அமைதி கிடைக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். செலவுகள் கூடும். கலைத்துறையினருக்கு விடா முயற்சியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பண வரத்து திருப்தி தரும். அனுகூலமாக நடக்கும். அரசியல்துறையினருக்கு புத்தி தெளிவு ஏற்படும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மன குழப்பம் நீங்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய பணிகளில் இருந்த தொய்வு நீங்கும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் அலட்சியம் காட்டாமல் இருப்பது நல்லது. விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும்போது கவனம் தேவை.

**தெய்வம்: சிவபெருமான், ஸ்லோகம்: சந்திர காயத்ரி, பரிகாரம்: பிரதோஷ வழிபாடு, சந்திராஷ்டமம்: ஆனி 22 (06/07/26) திங்கள்கிழமை காலை 7.23 மணி முதல் 24 (08/07/26) புதன்கிழமை பகல் 12.24 மணி வரை.**




**கன்னி ராசி அன்பர்களே!**

உழைப்பிற்கு முன்னுதாரணமாய் வாழ்ந்து காட்டும் கன்னி ராசி அன்பர்களே நீங்கள் பண விஷயங்களில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். காய்ச்சல், சிரங்கு போன்ற நோய்கள் உண்டாகலாம். சுக்கிரன் சஞ்சாரத்தால் பணவரத்து அதிகரிக்கும். காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். புதிய ஆர்டர்கள் வரும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்புக்கு ஏற்ற பலனை அடைவார்கள். நிலுவையில் உள்ள பணம் வரும். பிள்ளைகள் மூலம் செலவு இருக்கும். அவர்களது முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பீர்கள். பெண்களுக்கு பயணங்கள் செல்ல நேரலாம். கலைத்துறையினருக்கு ராசிநாதன் புதனின் சஞ்சாரம் எதிர்பாராத நல்ல திருப்பங்களை ஏற்படுத்தும். மனதில் சந்தோஷம் உண்டாகும். எந்த பிரச்சனை வந்தாலும் சமாளித்து முன்னேறிச் செல்வீர்கள் மற்றவர்கள் பாராட்டக் கூடிய மிகப்பெரிய செயலை செய்து முடிப்பீர்கள். அரசியல்துறையினருக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து ஆகியவை உயரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். பெரியோர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். திறமை வெளிப்படும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். மனதில் தைரியம் உண்டாகும். மாணவர் களுக்கு நீண்ட நேரம் கண்விழிப்பதை தவிர்க்கவும், அன்றைய பாடங் களை அன்றைய தினமே படித்து விடுவது வெற்றிக்கு வழிவகுக்கும்.

**தெய்வம்: கேது, ஸ்லோகம்: கேது காயத்ரி, பரிகாரம்: பெருமாள் வழிபாடு, சந்த்ராஷடமம்: ஆனி 24 (08/07/26) புதன்கிழமை பகல் 12.25 மணி முதல் 26 (10/07/26) வெள்ளிக்கிழமை மாலை 3.45 மணி வரை.**




**துலா ராசி அன்பர்களே!**

அனைவரிடத்திலும் சரிசமமாக நடந்து கொள்ளும் துலா ராசி அன்பர்களே நீங்கள் சிக்கனத்தை கடைபிடிப்பதில் கவனம் செலுத்துவது நன்மையைத் தரும். அதிக விஷயங்களை தெரிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்கள். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வாக்குவன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். வேளை தவறி உண்ண வேண்டி இருக்கும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். பணி நிமித்தமாக பயணம் செல்ல வேண்டி வரலாம். பிள்ளைகள் விஷயத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். கொடுத்த வேலையை திறமையுடன் செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். அரசியல்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். எந்த தடைகளையும் தாண்டி எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்ப்புகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது. கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

**தெய்வம்: மகாலெக்ஷ்மி, ஸ்லோகம்: மகாலெஷ்மி காயத்ரி, பரிகாரம்: மகாலட்சுமியை வழிபாடு, சந்த்ராஷடமம்: ஆனி 26 (10/07/26) வெள்ளிக்கிழமை மாலை 3.46 மணி முதல் 28 (12/07/26) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.13 மணி வரை.**




**விருச்சிக ராசி அன்பர்களே!**

எடுத்த வேலையை கொடுத்த நேரத்தில் செய்யும் திறன் படைத்த விருச்சிக ராசி அன்பர்களே நீங்கள் அவசரத்தை விட்டுவிட்டு நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. இந்த மாதம் எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பண வரத்து அதிகரிக்கும். மற்றவர்கள் செய்ய தயங்கும் வேலையை செய்து முடித்து பாராட்டு கிடைக்க பெறுவீர்கள். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த ஊடல்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். பெண்களுக்கு எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். சூரியனுடன் ராசியாதிபதி செவ்வாய் இருவரும் சேர்ந்து இருப்பதால் அனைவருடனும் அனுசரித்து செல்வது நல்லது. அரசியல்துறையினருக்கு பூர்வீக சொத்துக்கள் மூலம் வரவேண்டிய லாபம் தாமதப்படும். எதிர்பார்த்த காரியங்கள் நல்லபடியாக முடிய கடினமாக பணியாற்ற வேண்டி இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். வீண் அலைச்சல் உண்டாகலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண எடுக்கும் முயற்சிகள் கைகூடும். எதிர்கால கல்வி பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**தெய்வம்: ராகு, ஸ்லோகம்: நவக்கிரக காயத்ரி, பரிகாரம்: வள்ளி தேவசேனா முருகர் வழிபாடு, சந்திராஷ்டமம்: ஆனி 28 (12/07/26) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.14 மணி முதல் 30 (14/07/26) செவ்வாய்க்கிழமை இரவு 8.42 மணி வரை.**

### தனுசு ராசி அன்பர்களே!




நேர்மையாகவே அனைத்து காரியங்களையும் சாதித்து கொள்ளும் தனுசு ராசி அன்பர்களே நீங்கள் சோம்பலை ஒதுக்கி விடுவது உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். இந்த மாதம் மன உறுதி அதிகரிக்கும். சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். வீட்டிற்கு தேவையான வசதிகள் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நல்லது. திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் விரும்பத்தகாத வாக்குவாதங்கள் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே அனுசரித்து செல்வது நல்லது. குழந்தைகள் பற்றிய கவலை உண்டாகும். அவர்களுக்காக பாடுபடுவீர்கள். பெண்களுக்கு திட்டமிட்டு செய்தாலும் காரியங்களில் தடை ஏற்படும். எதிர்பாராத செலவு உண்டாகும். கலைத்துறையினருக்கு உடன் பணி புரிபவர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம் கவனம் தேவை. எதிலும் முழு கவனத்துடன் ஈடுபடுவது நன்மையை தரும். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். வீண் அலைச்சல் ஏற்படலாம். ஆனாலும் சுக்கிரன் சஞ்சாரத்தால் மனதில் இருந்த குழப்பம் நீங்கி நிம்மதி உண்டாகும். கடன் பிரச்சனை தீரும். பண வரத்து அதிகரிக்கும். சூரியன் சஞ்சாரத்தால் ஏற்கனவே செய்த ஒரு செயலை நினைத்து வருந்த நேரிடும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்கள் தாமதமாகும். புதிய நட்பு கிடைக்கும்.

**தெய்வம்: தக்ஷிணா மூர்த்தி, ஸ்லோகம்: குரு காயத்ரி, பரிகாரம்: சித்தர்களை வழிபாடு, சந்திராஷ்டமம்: ஆனி 30 (14/07/26) செவ்வாய்க்கிழமை இரவு 8.43 மணி முதல் 32 16/07/26 வியாழக் கிழமை இரவு 12.03 மணி வரை**

### மகர ராசி அன்பர்களே!




வாக்குவாதத்தில் திறமையுடைய அதே வேளையில் மனசாட்சிக்கும் இடம் கொடுத்து நடக்கும் மகர ராசி அன்பர்களே இந்த மாதம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படலாம். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படுத்தும். சுக்கிரன் சஞ்சாரத்தால் வெளிநாட்டு பயண வாய்ப்புகள் வரலாம். தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும். பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச் சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். தடைபட்டிருந்த பணம் கைக்கு வந்து சேரும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவது நல்லது. கலைத் துறையினருக்கு யோககாரகன் சுக்கிரன் ராசிநாதன் சனிக்கு கேந்திரம் பெறுவதால் எதையும் சாதிக்கும் திறமை அதிகமாகும். நினைத்த காரியத்தை நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு நீங்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும். நினைத்த காரியத்தை செய்து முடிக்க எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். வீண் மனக்கவலை உண்டாகும். மாணவர்களுக்கு மிகவும் கவனமாக பாடங்களை படிப்பது அவசியம். சக மாணவர்களுடன் நிதானமாக பழகுவது நல்லது.

**தெய்வம்: ஆஞ்சநேயர், ஸ்லோகம்: அனுமன் சலிசா, பரிகாரம்: ஆஞ்சநேயர் வழிபாடு. சந்திராஷ்டமம்: ஆனி 32 (16/07/26) வியாழக்கிழமை இரவு 12.04 மணி முதல் ஆடி 3 (19/07/26) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.09 மணி வரை**

### கும்ப ராசி அன்பர்களே!




சிறிய வேலையாக இருந்தாலும் அதிகமான உழைப்பைச் செலுத்தும் குணமுடைய கும்ப ராசி அன்பர்களே இந்த மாதம் குறிக்கோளற்ற வீண் அலைச்சல் உண்டாகலாம். தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்குவர தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலைப் பளுவையும் சந்திக்க நேரிடும். சிலருக்கு இட மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வதும் நல்லது. சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். எச்சரிக்கை தேவை. அறிவுதிறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். எங்கு இருந்தாலும் ருசியான உணவை உண்டு மகிழ்வீர்கள். புதன் மனநிம்மதியை தருவார். சாமர்த்தியமாக காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள். அரசியல் துறையினருக்கு உங்கள் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயல்படுத்த முடிவெடுப்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். செயல்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். நண்பர்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். இனிமையான வார்த்தை களால் சிக்கலான காரியத்தை கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். மாணவர்கள் கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது. வீண் அலைச்சல் இருக்கும்.

**தெய்வம்: அம்பாள், ஸ்லோகம்: துக்கநிவாரண அஷ்ட்டகம், பரிகாரம்: ஆதிபராசக்தி வழிபாடு, சந்திராஷ்டமம்: ஆடி 3 (19/07/26) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.10 மணி முதல் 5 (21/07/26) செவ்வாய்க்கிழமை பகல் 12.41 மணி வரை.**

### மீன ராசி அன்பர்களே !




மற்றவர்களுக்கு மதிப்பும், கவுரவமும் தரக் கூடிய அதே நேரத்தில் தேவையான உதவிகளையும் தயங்காமல் செய்யும் மீன ராசி அன்பர்களே, இந்த மாதம் கவனம் தேவை. வீண் பிரச்சனையால் மனக்குழப்பம் ஏற்படலாம். பயணங்களில் தடங்கல் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடைகள் ஏற்படலாம். வழக்குகள் சம்பந்தமான விஷயங்களில் மிகுந்த எச்சரிக்கை அவசியம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்கும். சக ஊழியர்கள் மேல் அதிகாரிகளிடம் இருந்து வந்த மனக்கசப்பு மாறும். குடும்பத்தில் நிம்மதி அதிகரிக்கும். உங்கள் கருத்துகளுக்கு மதிப்பு அதிகரிக்கும். கணவன் மனைவிக்கிடையே இருந்து வந்த மனகிலேசங்கள் மறைந்து ஒற்றுமை ஓங்கும். பிள்ளைகளிடம் பாசம் அதிகரிக்கும். பெற்றோர்கள் - உறவினர்களின் அரவணைப்பு அதிகமாகும்.

பெண்களுக்கு பயணங்களில் எதிர்பாராத தடங்கல் உண்டாகலாம். யோசித்து செய்யும் காரியங்கள் சாதகமான பலன்தரும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த அளவு வாய்ப்புகள் வந்து குவியும். பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது.அரசியல்துறையினருக்கு எந்த வாக்குறுதியையும் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. கோபத்தை குறைப்பது நன்மை தரும். வேலைகளை கவனமுடன் செய்வது நல்லது. எதிலும் நிதானம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைப்பதில் தடை ஏற்படலாம்.

**தெய்வம்: பைரவர், ஸ்லோகம்: பைரவர் காயத்ரி, பரிகாரம்: பைரவருக்கு அர்ச்சனை, சந்திராஷ்டமம்: ஆடி 5 (21/07/26) செவ்வாய்க்கிழமை பகல் 12.42 மணி 7 (23/07/26) வியாழக்கிழமை இரவு 10.34 மணி வரை**



*திருவண்ணாமலை மாவட்ட சைபர் கிரைம் காவல்துறையினர் மூலம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி நல்லவன்பாளையம், மாணவ மாணவிகளுக்கு சைபர் குற்றங்கள் குறித்து விழிப்புணர்வும், 'காவல் உதவி' செயலியின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டது.*

சிறப்பு நிருபர்: R.சக்திவேல், வேட்டவலம்.

---

### SP திரு.K.S.பிரவீன் கௌதம் IPS அவர்கள் உத்தரவின் பேரில்

# நடை ரோந்து மூலம் கண்காணிக்கும் தேனி மாவட்ட காவல்துறையினர்

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.K.S.பிரவீன் கௌதம் IPS அவர்களின் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிருபர்: S.வேல்முருகன், தேனி.









# உடல் நலன் காக்கும் முருங்கை

## நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் குளோரோஜெனிக் அமிலம் உள்ளது

முருங்கை பவுடர் அல்லது பொடி என்பது முருங்கை மரத்தின் இலைகளை உலர வைத்து தயாரிக்கப்படுகிறது. இந்த பொடியை கொண்டு நாம் எண்ணற்ற நன்மைகளை பெற முடியும்.

முருங்கை இலையில் விட்டமின் ஏ, சி, தயமின் பி1, ரிபோ.ஃப்ளேவின், நியசின், போலேட், மக்னீசியம், இரும்புச் சத்து, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் ஜிங்க் போன்ற ஏராளமான சத்துக்கள் உள்ளன.

10 கிராம் முருங்கைப் பொடியில் ஒரு நாளைக்கு தேவையான 32% இரும்புச் சத்து தேவை பூர்த்தி ஆகிறது. முருங்கைக்காய் பொடி நம்முடைய இரத்த ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கிறது. எனவே மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு ஏற்படும் பிடிப்பு மற்றும் இரத்த இழப்பை ஈடுகட்ட உதவுகிறது. மேலும் உங்களை சுறுசுறுப்பாகவும் ஆற்றலுடனும் செயல்பட உதவி செய்யும்.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட வேளாண் ஆராய்ச்சி சேவையின்படி, முருங்கைப் பொடி விட்டமின் ஏ மற்றும் விட்டமின் ஈ ஆகியவற்றின் வளமான ஆதாரமாகும். இவை உங்க சருமத்தை ஆரோக்கியமாகவும் மினுமினுப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது. வயதான காலத்தில் ஏற்படும் கோடுகள், சரும சுருக்கங்கள் ஆகியவற்றை போக்குகிறது. இது அழற்சி எதிர்ப்பு பண்புகளுடன் முகப்பருவை நீக்க பயன்படுகிறது. இதில் ஆன்டி ஆக்ஸிடன்கள் உள்ளன.

இந்த முருங்கையில் அடாப்டோஜென்கள் என்ற பொருள் காணப்படுகிறது. இது நம்மை மன அழுத்தத்தில் இருந்து காக்கிறது என மருந்தியல் ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே முருங்கை இலை பொடியை சாப்பிட்டு வந்தால் உங்க மன அழுத்தம் குறைந்து ரிலாக்ஸ் பெறுவீர்கள்.

முருங்கை பொடியில் உள்ள கால்சியம் உங்களுக்கு அதிக செரிமானத்தை கொடுக்கிறது. இதில் நார்ச்சத்துக்கள் அதிகளவில் உள்ளன. ஆரோக்கியமான குடல் செயல்பாட்டிற்கு உதவி செய்கிறது.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் குளோரோஜெனிக் அமிலம் உள்ளது. நீரிழிவு பராமரிப்பு இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின்படி, முருங்கை இலைப்பொடியில் உள்ள குளோரோஜெனிக் அமிலம் திடீரென இரத்த சர்க்கரை அளவு அதிகரிப்பதை கட்டுப்படுத்துகிறது.

முருங்கை இலைப் பொடியில் கொழுப்பை கரைக்கும் சக்தி காணப்படுகிறது. இதனால் இது இதய ஆரோக்கியம் மேம்பட உதவும். ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் மேம்படுத்த இது உதவி செய்கிறது.

ஆண்களின் புரோஸ்டேட் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது. முருங்கை விதைகள் மற்றும் இலைகளில் குளுக்கோசினோலேட்டுகள் என்ற சல்பர் பொருள் உள்ளது. இது ஆன்டி கேன்சர் தன்மை கொண்டு இருப்பதால் புரோஸ்டேட் புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

கல்லீரல் ஆரோக்கியத்தை காக்கிறது. முருங்கை இலையில் அதிக சத்துள்ள பாலிபினால்கள் காணப்படுகின்றன. இது கல்லீரல் செல்கள் அழிவதை தடுக்கிறது. கல்லீரலில் இருக்கும் நச்சுக்களை வெளியேற்றி கல்லீரல் சீராக இயங்குவதற்கு உதவி செய்கிறது.








### திருநெல்வேலி மாவட்டம் சிவந்திப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட

# நொச்சிக்குளம் ஊராட்சி கோதா நகரில் நிறுவப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்கள்

## DSP திரு.ரகுபதி ராஜா தொடங்கி வைத்தார்

பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கிலும், குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், நடைபெற்ற குற்றங்களை விரைவாகக் கண்டறிவதற்கும், திருநெல்வேலி மாவட்டம் சிவந்திப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நொச்சிக்குளம் ஊராட்சியின் கோதா நகர் பகுதியில் நிறுவப்பட்டுள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமராக்களின் பயன்பாடு தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை திருநெல்வேலி ஊரக உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.ரகுபதி ராஜா அவர்கள் தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் சிசிடிவி கேமராக்களின் அவசியம், குற்றத் தடுப்பில் அவற்றின் பங்கு மற்றும் காவல்துறையுடன் பொதுமக்கள் இணைந்து செயல்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்வில் சிவந்திப்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு. ராபர்ட், நொச்சிக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் கோதா நகர் பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டனர். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி பாதுகாப்பான சமூகத்தை உருவாக்க திருநெல்வேலி மாவட்ட காவல்துறை தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி.



*கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீசார் மேற்கொண்ட தீவிர சோதனையில் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட விஜய்(28), சமுத்திரராஜன் (63), மாரிக்கண்ணன் (25) ஆகிய 3 எதிரிகள் கைது செய்யப்பட்டனர். சோதனையின்போது 71 பாக்கெட் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. எதிரிகள் மீது COTPA Act–ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், போதைப்பொருட்கள் மற்றும் பிற சட்டவிரோத செயல்பாடுகள் குறித்த தகவல்களை பொதுமக்கள் 100 / 9514144100 என்ற அவசர உதவி எண்ணிலோ அல்லது Drug Free Tamil Nadu App மூலமாகவோ தெரிவிக்கலாம்.*

நிருபர்: V.முருகேன், கோவில்பட்டி.

---

# ஆடுகளை திருடி வந்த 2 பேர் கைது செய்த ஆண்டிப்பட்டி போலீஸார்





கடந்த ஓராண்டாக ஆண்டிபட்டி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இரவு நேரங்களில் ஆடுகளை கருவேல நாயக்கன்பட்டியை சேர்ந்த முருகன் மற்றும் ராஜதானியைச் சேர்ந்த சின்னசாமி என்ற 2 பேரும் சேர்ந்து இரவு நேரங்களில் தொடர்ச்சியாக வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவுகளில் ஆடுகளைத் திருடி மறுநாள் அவர்களது கறிக்கடையிலேயே வைத்து உரித்து விற்பனை செய்து வந்துள்ளனர். ஆடு திருடியவர்களை தொடர்ச்சியாக கண்காணித்து தேடி வந்த ஆண்டிபட்டி காவல்துறையினர் SI திரு.ரஞ்சித், SSI திரு.துரைராஜ், தலைமை காவலர்கள் திரு.ராஜ்குமார், திரு.அசோக் ஆகிய காவல் குழுவினர் இவர்களை கண்டறிந்து விசாரித்ததில், ஆண்டிபட்டி சுற்றுவட்டார பகுதிகளில் பல இடங்களில் ஆடுகளை திருடியது தெரியவந்தது. தற்போது ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த 6 ஆடு திருட்டு வழக்குகளுக்காக 2 பேரும் கைது செய்யப்பட்டு, தேனி மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டனர்.

நிருபர்: V.வேல்முருகன், தேனி.



SI திரு.ரஞ்சித்



SSI திரு.துரைராஜ்



## பேருந்தில் தவற விட்ட பொருட்களை

# விரைந்து கண்டறிந்து ஒப்படைத்த மேல்மலையனூர் காவல் நிலைய போலீஸார்

சென்னையிலிருந்து சொந்த ஊரான மேல்மலையனூருக்கு அருகில் உள்ள செக்கடிகுப்பம் கிராமத்துக்கு பேருந்தில் வந்த வேணுகோபால் மகன் பூபாலன்(35) என்பவர் மேல்மலையனூர் பேருந்து நிலையத்தில் தனது மடிக்கணினி, செல்போன் மற்றும் பணப்பையை காணவில்லை தவறவிட்டுள்ளார்.

தொடர்ந்து, அவர் மேல்மலையனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததையடுத்து, CSR பதிவு செய்யப்பட்டு, உடனடியாக தலைமைக் காவலர் (HC 710) திரு.பிரபாகரன் விழுப்புரம் மாவட்ட சைபர் பிரிவு உதவியுடன் மேற்கொண்ட நடவடிக்கையில், பூபாலன் தவறவிட்ட பொருட்கள் திருப்பத்தூர் பகுதியில் பாதுகாப்பாக மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட மடிக்கணினி, செல்போன் மற்றும் பணப்பை ஆகியவற்றை உதவி ஆய்வாளர் திரு.ஜெயக்குமார், தலைமை காவலர்கள் திரு.குணசேகர், திரு.பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் பூபாலனிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது.

நிருபர்: R.ராமநாதன், விழுப்புரம்.




## விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - | ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - | ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



# தேடப்படும் குற்றவாளியை பிடித்த பெண் ஊர்காவல் படை வீராங்கனை

## கன்னியாகுமரி SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் பாராட்டு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் காவல் துறையுடன் இணைந்து செயல்பட்டு வரும் ஊர்க்காவல் படையினரின் பங்களிப்பை பாராட்டும் வகையில், SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

செட்டிகுளம் சந்திப்பில் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த ஊர்க்காவல் படையை சேர்ந்த ஜலின் பிரபா அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான இருசக்கர வாகனத்தில் சென்ற நபரை பிடித்து காவல் துறையினரிடம் ஒப்படைத்தார்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர் தக்கலை காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பணவிளை பகுதியில் இருசக்கர வாகன திருட்டு வழக்கு (குற்ற எண் 289/26 U/s 331(4), 305(a) BNS) குற்றவாளியான இடலாக்குடி குளத்தூர் பகுதியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவரின் மகன் ராஜகுமரன்(26) என்பதும், பல்வேறு காவல் நிலையங்களில் அவர் மீது வழக்குகள் நிலுவையில் உள்ளதும் என்பதும் தேடப்படும் குற்றவாளி என்பதும் தெரியவந்தது.

குற்றவாளியை கண்டறிந்து கைது செய்ய முக்கிய பங்காற்றிய ஊர்க்காவல் படையை சேர்ந்த ஜலின் பிரபாவை SP Dr.R.ஸ்டாலின் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டி சான்றிதழ் மற்றும் பண வெகுமதி வழங்கினார்.

**நிருபர்: J.ஜெயவேல்முருகன், நாகர்கோவில்.**



# காளியின் இருள் சக்தி ரகசியங்கள்



நம் பாரத தேசம் பழம்பெரும் தேசமாகும். நம் தேசத்தில் பல ஆயிரக்கணக்கான ரிஷிகளும், ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும் தோன்றி மக்களுக்கு தெய்வீக வழியைக் காட்டி மக்களுக்கு நல்வழி காட்டினார்கள். ஆயற்கலை 64–ம் தங்களுடைய குருகுலத்தல் கற்றுக் கொடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்தினார்கள்.

தெய்வ வழிபாடுகளில் அனைத்து விதமான வழிபாடுகளையும் கற்றுக்கொடுத்தார்கள். ஒவ்வொரு தெய்வங்களையும் வழிபடும் முறைகளையும் மந்திரங்களையும், யந்திரங்களையும் கற்றுக் கொடுத்து மக்களை பக்தி வழியில் செல்ல அறிவுறுத்தினார்கள்.

ஒவ்வொரு தெய்வங்களுக்கும் பூஜை முறைகளும் வழிபடும் மந்திரங்களும் வேறுவேறாக இருக்கின்றது. அந்த வகையில் காளியின் சக்திகளையும் வழிபடும் முறைகளையும் பார்ப்போம்.

**காளியின் மகா சக்தி:**

காளி – காளி என்றால் கருப்பான பெண் சக்தியை குறிக்கும்.

**க– என்ற எழுத்தின் ரகசியம்:**

க–என்றால் கருப்பைக் குறிக்கும். கருப்பசாமியைக் குறிக்கும். முதல் எழுத்து கருப்பாகும். ஏன் என்றால் கருப்ப சாமி கருப்பாக இருப்பார்.

காகம் – காகம் என்ற பறவையின் நிறம் கருப்பாகும். அதன் நிறத்தை வைத்து அதனை க என்ற முதல் எழுத்தால் அழைக்கின்றோம்.

**கரும்பு:** கரும்பு என்ற சொல்லில் முதல் எழுத்தால் வருவது க எழத்து ஆகும். கருப்பு கரும்பை வைத்து பெயர் வந்தது.

**அடுப்புக் கரி:** விறகு எரிந்தபின் திடமாக வரும் பொருள் கரியாகும். ஏன் என்றால் அடுப்புக் கரி கருப்பாக உள்ளது. கரியின் முதல் எழுத்தும் க ஆகும்.

**பெருங்கரி– யானை:** யானையை களிறு என்று சொல்வார்கள். அதன் உருவம் கருப்பாக இருப்பதால் க என்ற சொல்லோடு அதைக் குறிப்பாகள்.

கார்மேகம் கருப்பாக இருப்பதால் க என்ற எழுத்தில் கார்மேகம் என்பார்கள்.

ஓம் காளி ஓம் நமசிவாய



# கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி எரசை, தேனி மாவட்டம்.

கண்ணன் என்ற பெயரில் க என்ற எழுத்து உள்ளது. கறுத்தனன், கருட்டிணன், கிருட்டிணன் என்று மருவி உள்ளது. இதுபோல், நாம் விளக்கமாக சொல்லிக் கொண்டே போகலாம்.

இதுபோல், காளி கருப்பாக இருப்பதால் க என்ற எழுத்து முதல் எழுத்தோடு காளி என்று பெயர் வந்தது.

க– என்ற சொல் இருளைக் குறிக்கும். இருள் கருப்பாக உள்ளது. காரிருள், கரிய இருள் அல்லது கருப்பான இருள் என்று அர்த்தம்.

### அண்டமே காளி

இந்த அண்டமே காளிதான். காரிருளை உடைய இந்த அண்டமே காளிதான். காளியே கரிய அண்டமாக விளங்குகின்றாள்.

காளியே இருளாகும். அதில் உள்ள வெளிச்சமே சிவனாகும். கருப்பு இருளே காளியாகும். காரிருள் காளியாகும். அதில் இருந்து சிதறி கிடக்கும் வெளிச்சமே சிவனாகும்.

### இருளும், ஒளியும்

இருளும், ஒளியும் இந்த பிரபஞ்சத்திற்கு தேவையாகும். இருளில் பிரபஞ்ச உயிர்கள் உற்பத்தியாகின்றது. வெளிச்சம் அந்த உயிர்களை காத்து வளர்க்கின்றது. இருளில் அனைத்து உயிர்களும் உற்பத்தியாகின்றது. அதனால் இருளும் ஒளியும் அண்ட பிரபஞ்சத்திற்கான சமநிலையாகும். பூமியில் இரவும் பகலும் வந்தால்தான் பூமி சமநிலையாகும்.

இருளை சாத்தானுக்கும், வெளிச்சத்தை கடவுளுக்கும் ஒப்பிடுவது ஒரு அறியாமையாகும். இருளும், ஒளியும் அண்ட பிரபஞ்ச இயக்கத்திற்கு தேவையாகும். இருளை வெறுப்பது ஒளியை விரும்புவது ஒரு அறியாமையான மன நோயாகும்.

இருளை தீமைக்கும், வெளிச்சத்தை நன்மைக்கும் ஒப்பிடுவது ஒரு அறியாமையான மன நோயாகும். இந்த மன நோய்களில் இருந்து விடுதலை பெற்று மனம் சம நிலை அடைய வேண்டும்.

ஒருவர் செய்யும் பாவ, புண்ணியங்களே ஒருவரின் நன்மைக்கும், தீமைக்கும் கொண்டு செல்லும். கடவுள் சாத்தான் என்ற மன நிலை மனிதர்களிடையே வெறுப்பை உருவாக்கும். ஒருவர் செய்யும் நற்காரியங்களே ஒருவரை மேன்மை நிலைக்கு ஆன்மாவை கொண்டு செல்லும். தீய எண்ணங்கள் கீழ் நிலைக்கு ஆன்மாவை கொண்டு செல்லும். இதுவே பிரபஞ்ச விதியாகும்.

இருள் முடியும் இடத்தில் வெளிச்சம் ஆரம்பிக்கும். வெளிச்சம் முடியும் இடத்தில் இருள் ஆரம்பிக்கும். இருள் காளியாகும். வெளிச்சம் சிவனாகும். சிவனில்லாமல் சக்தியில்லை. சக்தியில்லாமல் சிவனில்லை என்ற சொல்லின் உண்மையாகும்.

### கருப்பை: காளி

பெண்ணின் கர்ப்ப பை புனிதமான கருதப்படுகிறது. கருப்பை இருள் சேரந்து இருக்கும் காளியின் அம்சமாகும். பெண்களில் கருப்பையை காளியே காக்கின்றாள். அனைத்து பெண் விலங்குகளிடமும், பெண்களிடமும் கருப்பையில் இருந்தே உயிர்கள் உற்பத்தியாகின்றது. செடி, மரம் தாவரங்களுக்கு பூமியின் உள்பகுதியே கருப்பையாக இருக்கும்.

விதைகளை மண்ணைப் போட்டு மூடினால், அது இருள் நிறைந்த கருப்பையாகும். குறிப்பிட்ட நாளில் முளைத்து வந்து அந்த செடிகளை சூரியனான வெளிச்சம் வளர்க்கின்றது. பறவைகளுக்கு முட்டையின் ஒடு அவைகளுக்கு இருளை உருவாக்கு கின்றது. உயிர்கள் முட்டையின் இருளில் குறிப்பிட்ட நாளில் உருவான பிறகு முட்டை ஒடு உடைந்து குஞ்சுகள் வெளிவந்து வெளிச்சத்தில் அதன் சிறகுகள் விரிவடைகின்றது.

அண்ட இருளாகிய காளி தாய் ஸ்தானமாக இருந்து உயிர்களை அன்போடு உருவாக்கி

காக்கின்றது. அனைத்து உயிர்களும் காளிக்கு பிள்ளைகள்தான். அதனால் காளி தாயுள்ளம் கொண்ட அன்பு நிறைந்த தெய்வமாகும்.

கல் இடுக்கு, மரப்பொந்து இருளில் தேள், பூரான், கனுக்காளிகளும் புழு பூச்சிகள் உருவாகின்றது. இருள் புழுக்கத்தில் உருவாகின்றது.

### அண்ட காளியின் பேரன்பு

அண்ட காளியான தாய் அனைத்து உலகங்களில் உள்ள உயிர்களின் பக்திக்கும் மனம் இறங்கி அருள்புரிபவள் ஆவாள். காளி சிறிய தவறுக்கு மன்னிப்பளிக்கும் பெரிய தவறுகளுக்கு தண்டனை கொடுத்து நல்வழிப்படுத்தும்.

காளி அன்பிற்கு அன்பை பொழியும் தாயாகும். ஆனால், பாவங்களையும் தீமைகளையும் அழிக்கும் ருத்திர காளியாகும். அன்பிற்கு அன்பாகும். தீமைகளை அழிக்கும் சக்தியாகவும் விளங்குகின்றது.

காளி பக்திக்கு மயங்க்கூடியதாகும். காளி சக்தி அன்பான பக்தர்களின் பக்திக்கும் வசப்பட்டு, அவர்களுக்கு அருளை வழங்கும் அனைத்து உயிர்களின் சக்தியே காளியாகும். காளியிடம் இருந்து அனைத்து சக்திகளும் பிரிகின்றது. காளி நல்லவர்களை காப்பாற்றி தீய அசுர சக்திகளை அழிக்கும்.

### ஞானமே காளி

காளியே சைவப் பலிகளின் மூலம் பூஜை செய்து கொள்ளலாம். ஆதியில் சைவப் பலிகளை வைத்து நம் சித்தர்களும் ரிஷிகளும் பூஜை செய்துள்ளனர். அசைவப் பலிகள் இடையில் வந்து சேர்க்கப்பட்டதாகும்.

உயிர்களை வதைக்கும் இரத்தப் பலியை காளி ஒருபோதும் விரும்புவதில்லை. சைவப் பலியே காளிக்கு மகிழ்ச்சியை அளிக்கும். ஞானத்தையும் வீரத்தையும் காளியிடம் இருந்து வருகின்றது. காளி வெண் சக்தியின் வீரமாகும். காளி மகா ஞானத்தைக் கொடுக்கக் கூடியது. காளியே சிரிய உருவாக எடுத்து மனோன்மணியாக சித்தர்களுக்கு ஞானத்தை போதிக்கின்றது.

மனிதன் அறியாமையால் காளிக்கு கொடுக்கும் ஆடு, கோழி, எருமை போன்ற உயிர் பலிகளை விரும்பாமல் இருந்தாலும் அன்போடு பக்தர்கள் கொடுப்பதால் அவர்களை மன்னித்து அவர்கள் அன்பை ஏற்றுக் கொள்கிறது. அற வழியில் தர்மமான பாதையில் செல்வதே காளிக்கும் மகிழ்ச்சியாகும். உயிர் பலி கொடுப்பதை காளி எப்போதும் முழுமையாக ஏற்றுக் கொள்ளாது.



நாம் அன்போடு சைவப் படையல்களோடு காளியை வணங்கி அதன் முழு அருளைப் பெறுவோம். காளி என்பது பிரபஞ்சத்தின் மகா சக்தியாகும்.

சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும், ரிஷிகளும் காளியின் பக்தி யோகத்தில் சென்று காளியை வழிபட்டு காளியிடம் விரும்பிய வரங்களைப் பெற்றார்கள். அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது சக்தியேயாகும். அனைத்துக்குள்ளும் உயிர் சக்தியாக இயங்குவது காளி சக்தியாகும்.

### பில்லி சூனிய ஏவல் சக்திகளை அழிக்கும் காளி

ஒருவர் உடம்பில் உள்ள பில்லி, சூனிய, ஏவல் சக்திகளை காளி விரட்டி அழிக்கும். தீய மந்திரங்கள் காளியிடம் வேலை செய்யாது. தீய எண்ணங்கள் கொண்டவர்கள் காளியை தீமைகளுக்கு பயன்புடுத்தினால் பொறுமையாக இருந்து பின்பு அவர்களுக்கு தண்டனை அளிக்கும். காளி மந்திரம் நாம் தினமும் சொல்லச் சொல்ல தீமைகள் அழிந்து நம்மைகள் பிறக்கும்.

நம் பாரத தேசசத்தின் ஆறு வழிபாடுகளில் ஒன்றாக சக்தி வழிபாடு உள்ளது.

ஆறு வழிபாடுகள்:

1. சைவம் – சிவ வழிபாடு, 2. வைணவம் – விஷ்ணு வழிபாடு, 3. சாக்தம் – சக்தி வழிபாடு, கணபத்யம் – கணபதி வழிபாடு, சௌரம் – சூரிய வழிபாடு, 6. கௌமாரம் – முருக வழிபாடு.

இந்த 6 வழிபாடுகளும் மக்களுக்குள் பின்னி பிணைந்துள்ளன. இந்த 6 வழிபாடுகளில் ஒன்றுதான் சாக்த வழிபாடான சக்தி வழிபாடாகும். கிராமங்களில் சாக்த வழிபாடான சக்தி வழிபாடு அதிகம் உள்ளது. சக்தியே பலவாறாகப் பிரிந்து வேறு வேறு பெயர்களில் அவதரித்து மக்களைக் காத்து இரட்சிக்கின்றது. இதில் காளி வழிபாடு முக்கியமான ஒன்றாகும்.

### அசுரர்களை அழிக்கும் காளி

ஒவ்வொரு கால கட்டத்திலும் தீய சக்திகள் அதிகமாக அசுரர்கள் பெருகும்போது அந்த அதர்ம அசுரர்களை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்றது. பல அவதாரங்களாக காளி பிரிந்து மனிதர்களை காக்கின்றது.

### காளி பூஜை செய்யும் முறை

காளியை சைவ பூஜை முறைகளில் பூஜை செய்யலாம். விபூதி, குங்குமம், மஞ்சள் பொடி, எலுமிச்சம் பழம், தேங்காய், வாழைப்பழம், அவல், பொரி, நாட்டுச் சர்க்கரை, வெற்றிலைப் பாக்கு, கற்பூரம், பத்தி, மல்லிகைப் பூ, மரிக்கொழுந்து, செவ்வரளி போன்றவற்றால் காளியை வழிபடலாம்.

காளி முன்னால் நாம் பூஜை செய்யும் போது நம்மை பெற்ற தாயின் முன்னாள் அமர்ந்து கேட்பது போல், நாம் அன்போடு கேட்டால் அனைத்து பிரச்சினைகளும் காளி தீர்த்து வைக்கும். அகில அண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாக இருக்கும் காளி சக்தி நம் உருவ அளவு சிறிய உருவம் எடுத்து நம் அன்பிற்காக நம்முன் வந்து நமக்கு அருள்புரியும் தாயான ஈஸ்வரியாக விளங்குகின்றாள்.

**காளியின் ஸ்தூல வாகனம்:** காளியின்





ஸ்தூல வாகனமாக சிம்மம் விளங்குகின்றது. சிம்ம வானமே காளி தீமைகளை அழிப்பவர் ஆவார்.

காளியின் சூட்சம வாகனம்: பூனை

காளியின் சூட்சம வாகனமாக பூனை விளங்குகின்றது. பூனையைக் கண்டால் பேய், பிசாசுகளும், தீய சக்திகளும் விலகி ஓடும். பூனை மீதும் காளி சூட்சமமாக இறங்கி தீமைகளை அழிக்கும். பூனைகள் இருக்கும் வீட்டிலே தீய சக்திகள் வராது. காளி அருவமாக பூனை மீதேறி சகல உலகங்களுக்கும் செல்லும். பூனை மந்திரம் சொல்லி காளியை வழிபடும்போது காளியின் முழு அருள் சக்தி கிடைக்கும்.

காளி மூல மந்திரம்:

ஏகாங்க ரீங்கார ஆங்கார ரூபி
சம்பூர்ண சௌந்தர்ய தூம லீவி
மோகினி சாத்தானை அடக்கிய மாயி
மேகல சிங்கா மேவிய உருத்தி
உருத்திர மயான பாதாள வசியி
ஓம் காளி...

என்று இந்த மந்திரத்தை தினமும் சொல்லலாம். காளி மீது முழு பக்தியோடு நாம் பக்தியோடு இந்த மந்திரத்தை சொல்லலாம். தெய்வத்தின் பக்தியே மனிதர்களுக்கு சக்தியைத் தரும். அந்த சக்தியே சகல சித்தியைத் தரும். நம் முன்னோர்கள் சொன்ன வழியில் நாம் காளி பூஜை செய்து நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.




### உலக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு

# தஞ்சாவூர் நகரில் மாவட்ட அளவிலான இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி

## SP திரு.A. சுந்தரவதனம் IPS அவர்கள் தொடங்கி வைத்தார்

உலக போதைப்பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை சார்பில் மாவட்டம் முழுவதும் பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே போதைப்பொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு இருசக்கர வாகன பேரணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, தஞ்சாவூர் நகரில் நடைபெற்ற மாவட்ட அளவிலான இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.A. சுந்தரவதனம் IPS அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் உடல், மன மற்றும் சமூக பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்துவதும், போதைப்பொருள் இல்லாத ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதும் இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.



போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வை தொடர்ந்து வலியுறுத்தி வரும் தஞ்சாவூர் மாவட்ட காவல்துறை பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகி, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிருபர்: B.சத்தியராஜ், தஞ்சாவூர்.

# நீர் பெருக்கும் கோரைக்கிழங்கு



சிறுநீரை பெருக்கும்; வியர்வையை அதிகமாக்கும்; உடல் வெப்பத்தை அகற்றும்; உடல் பலமுண்டாகும்; வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்; மாதவிடாயை தூண்டும்; குழந்தைகளுக்கான செரிமான சக்தியை அதிகரிக்கும். பதிவுரிமை செய்யப்பட்ட பல மருந்துகளில் கோரைக்கிழங்கு சேர்கின்றது.

இந்தியாவின் சமவெளிப் பகுதிகளில் வளர்கின்ற ஒரு புல்வகைச் சேர்ந்த சிறுசெடி. தாவரம். தாவரத்தின் வேர்க் கிழங்குகளே கோரைக் கிழங்கு எனப்படும். தண்டுகள் மூன்று பட்டையானவை. உறுதியற்றவை.

கோரைக்கிழங்கு இலைகள் தட்டையானவை, கூரானவை, நீண்டவை. கிழங்குகள் முட்டை வடிவமானவை. தமிழகமெங்கும், கடற்கரை ஓரங்கள், காடுகள், பாழ்நிலங்களில் தானே வளர்கின்றது.

கோரைக்கிழங்கு காய்ந்த நிலையில் நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும். சில நாட்டு மருத்துவர்கள் கோரைக்கிழங்கை முத்தக்காசு என்றும் அழைக்கின்றனர்.

கோரைக்கிழங்கை காய வைத்து தூள் செய்து கொண்டு ½ தேக்கரண்டி வீதம் தினமும் காலை, மாலை இரண்டு வேளைகள் 1 டம்ளர் பாலில் கலந்து குடிக்க மூட்டு வலி, தசை வலி குணமாகும்.

கோரைக்கிழங்கு, காய்ச்சாத பசும் பால் ஆகியவற்றைச் சேர்த்து அரைத்து உடலில் பூசிக் குளித்து வர வியர்வை நாற்றம் குணமாகும்.

இஞ்சி, கோரைக்கிழங்கு இரண்டையும் சம அளவாக அரைத்து பசையாக்கி தேன் சிறிதளவு சேர்த்து சுண்டைக்காய் அளவு சாப்பிட குடல் புழுக்கள் வெளிப்படும்.

கோரைக்கிழங்கு நான்கினை எடுத்து நசுக்கி இரண்டு டம்ளர் நீரில் இட்டு கொதிக்க வைத்து, குடி நீர் செய்து வேளைக்கு 2 தேக்கரண்டி அளவு 2 நாட்கள் உள்ளுக்கு கொடுக்க குழந்தைகளுக்கு ஏற்படும் அஜீரணம் குணமாகும்.

பச்சையான கோரைக் கிழங்குகளைச் சேகரித்து நீரில் கழுவி சுத்தம் செய்து கொண்டு அரைத்து மார்பகத்தில் பூசி வர தாய்ப்பால் சுரப்பு அதிகமாகும்.

கோரைக்கிழங்கு சூரணம் ½ தேக்கரண்டி அளவு காலை, மாலை தேனில் உட்கொள்ள புத்தி கூர்மை அதிகமாகும்.

---



## வருண முத்திரை

**பெருவிரலின் நுனியோடு சுண்டுவிரலின் நுனியைசேர்க்கவும்.ருசியின்மை அகலும், வறட்டுஇருமல் அகலும், இரத்தசோகை,தோல்நோய் அகலும்,இரத்தம் சுத்தமாகும்.தினமும் 2, கைகளிலும் சம்மணகாலிட்டு அமர்ந்து 10நிமிடம் செய்யவும்.**

**இரண்டு கைகளிலும் செய்க...**



காவல் ஆணையர் Dr.A.அமல்ராஜ் IPS அவர்களின் உத்தரவின் பேரில்

# 784 வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 2,449.37 கிலோ போதைப்பொருள் அழிப்பு

சென்னை பெருநகர காவல் சரகத்திற்கு உட்பட்ட பல்வேறு காவல் நிலையங்களில் பதிவான 784 போதைப்பொருள் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட மொத்தம் 2,449.37 கிலோ கஞ்சா போதைப்பொருள் அழிக்கப்பட்டது.

சென்னை பெருநகர காவல் ஆணையாளர் Dr.A.அமல்ராஜ் IPS அவர்களின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட போதைப்பொருள் ஒழிப்புக் குழு (Drug Disposal Committee –DDC) மூலம் செங்கல்பட்டு மாவட்டம், தென்மேல்பாக்கத்தில் உள்ள GJ மல்டிகிளேவ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட இடத்தில், அனைத்து சுற்றுச்சூழல் மற்றும் சட்ட வழிமுறைகளுக்கு உட்பட்டு, சென்னை பெருநகர காவல் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் மற்றும் மனோவியல் பொருட்கள் அறிவியல் பூர்வமாக எரித்து அழிக்கப்பட்டது.

சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் (தலைமையிடம்) திரு.A.G. பாபு IPS அவர்கள் தலைமையிலான போதைப்பொருள் ஒழிப்புக் குழுவின் மேற்பார்வையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், துணை ஆணையாளர் (நுண்ணறிவுப் பிரிவு-I) திரு.R.சக்திவேல் IPS., மற்றும் தடய அறிவியல் துறையின் உதவி இயக்குநர் திரு.K.தேவராஜன் ஆகியோர் குழு உறுப்பினர்களாக கலந்து கொண்டனர்.

இளைஞர்களைப் பாதுகாப்பதற்கும், பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், போதைப்பொருள் கடத்தல் காரர்கள் மற்றும் அவர்களின் வலையமைப்புகளுக்கு எதிராக சென்னை பெருநகர காவல்துறை தொடர்ந்து கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சிறப்பு நிருபர்: LNK.சந்தன், சென்னை.

'போலீஸ் பார்வை' குழுமம் மற்றும் ஆண்டிப்பட்டி காவல்துறையினர் சார்பாக

# பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் ஒழிப்பு, பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா திம்மரச நாயக்கனூர் கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் 'போலீஸ் பார்வை' குழுமம் மற்றும் ஆண்டிப்பட்டி காவல்துறையினர் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆண்டிப்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர்கள் திரு. ரஞ்சித் மற்றும் திரு.முருகேசன் ஆகியோர் தலைமை வகித்தனர். ஊர் நாட்டாமை திரு. ரங்கராஜ், பள்ளி தலைமை ஆசிரியர் சத்திய சீலா மற்றும் பள்ளி மேலாண்மை குழுவினர், ஊர் பொதுமக்கள், பெற்றோர்கள் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாணவர்கள் மற்றும் தற்போதுள்ள மாணவர்கள் மாணவிகள் அனைவரும் நிகழ்ச்சியில் பங்கேற்று விழிப்புணர்வு பெற்றனர்.

நிகழ்ச்சியில் காவல் உதவி ஆய்வாளர் திரு.ரஞ்சித் அவர்கள் பேசுகையில், "நாட்டின் வருங்கால முதுகெலும்பாக விளங்கக்கூடிய மாணவச் செல்வங்களே நீங்கள் பெற்றோர்களுக்கு நல்ல பிள்ளைகளாகவும் ஆசிரியர்களுக்கு ஆற்றல்மிக்க




மாணவர்களாகவும் திகழ வேண்டும். அவ்வாறு நீங்கள் கல்வி இலக்கில் வெற்றிக்காண உங்கள் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் மேலும் எதையும் ஈடுபாடுடன் செய்யக்கூடிய பழக்க வழக்கங்களை பின்பற்ற வேண்டும்.

தெளிந்த நீர் போல் உங்கள் மனதை எந்தவிதமான சஞ்சலமும் இல்லாமல் தெளிவான தீர்க்க சிந்தனையுடன் கல்வியில் முழு கவனம் செலுத்த வேண்டும். மேலும், நமது வாழ்வை கேள்விக்குறியாக்கும். போதைப்பொருள் பழக்கங்கள் நமது உடல் நலத்தையும் மனநலத்தையும் பாதிப்படைய செய்து பெரும் பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். ஆகையால் நாம் போதை பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்று நல்ஒழுக்கத்துடன் தன்னம்பிக்கையோடும் ஊக்கத்தோடும் விழிப்புணர்வுடன் செயல்பட்டு கல்வியில் வெற்றி இலக்கை அடைந்து நல்ல மாணவச் செல்வங்களாக திகழ வேண்டும்." என கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தேனி மாவட்ட 'போலீஸ் பார்வை' நிருபர் திரு.V.வேல்முருகன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

நிருபர்: V.வேல்முருகன், தேனி.





# ஏழைமக்களின் பசிக்கு நெல்லுச்சோறு கொடுத்த முதல்வர் எம்.ஜி.ஆர்

1977 ஜூன் 30 மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். முதன்முதலாக தமிழகத்தின் 6–ஆவது முதல்வராக பதவியேற்ற நாள். பதவியேற்ற பின் முதன் முதலாக அலுவலகம் செல்கிறார். அங்கு அரசு உயர் அலுவலர்களின் ஆலோசனை கூட்டதிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காலை 10 மணிக்கு கோட், சூட் சகிதமாய் அரசு உயர் அலுவலர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள் அலோசனை அரங்கத்துக்குள் குழுமியிருந்தனராம்.

சிறிது நேரத்தில் TMX 4777 பதிவு எண் கொண்ட அவரின் பச்சை நிற அம்பாசடர் கார் அங்கு நுழைகிறது. காலத்தை வென்ற காவிய நாயகன் கார் கதவை திறந்து முதன் முறையாக அலுவலக வாசலில் கால் பதிக்கிறார்.

காத்திருந்த காவல் உயர் அலுவலர்கள் விரைப்புடன் சல்யூட் வைக்க... அரசு உயர் அலுவலர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்க..

பாதுகாவலர்கள் படைசூழ அலுவலகத்திற்குள் விருவிரு என ஆலோசனை அரங்கத்திற்குள் நுழைகிறார்.

“ஆட்சியை மக்கள் என்னிடம் நம்பி ஒப்படைத்து இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு செய்ய வேண்டிய நல்ல திட்டங்களை சொல்லுங்கள். ஆக வேண்டியதை நான் பார்த்து கொள்கிறேன்” என்று மாவட்ட ஆட்சியர்களிடமும், உயர் அலுவலர்களிடமும், ஆலோசனை கேட்கிறார்.

அப்பொழுது அந்த நேரத்தில், அந்த அரங்கு ஓரத்தில் வண்ணம் பூசிக்கொண்டிருந்த ஒரு இளைஞர், எவரையும் அனுமதிக்காத அந்த கூட்ட வளாகத்துக்குள் தடையை மீறி நுழைந்து விடுகிறார்.

காவலர்களின் கட்டுப்பாட்டை மீறினாலும் அந்த மக்கள் தலைவர், அந்த மனிதரை அருகில் அழைத்து, வந்த நோக்கத்தை சொல்ல சொல்கிறார்.

“எனக்கென்று எதுவும் நான்கேட்க வரவில்லை தலைவா! கிராமங்களில் இன்னமும் பாமர மக்கள் மக்கி போன சோளக் கூழைத்தான் சாப்பிட்டு வருகிறார்கள்.

நெல்லுச்சோறு என்பது மாசத்துல ஒருநாள் அல்லது வாரத்துல ஒருநாள், இல்லாட்டி நல்ல நாள் பெரிய நாளைக்குத்தான் பார்க்க முடியுது. இது நமக்கு ஆண்டவன் விதித்த விதி என்றே



**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**
**கோடாமை சான்றோர்க் கணி. (115)**

விளக்கம்: தீமையும் நன்மையும் எல்லார்க்கும் முன்பே குறிக்கப்பட்டு விட்டன; இதை அறிந்து நெஞ்சத்தால் நீதி தவறாது இருப்பது சான்றோருக்கு அழகாகும்.

மக்கள் நம்பி கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு வறுமையை பழகிக்கொண்டு, சகித்துவாழ முன்பிருந்த ஆட்சியாளர்களால் பழக்கப்படுத்தி விடப்பட்டிருக்கிறார்கள். அதை மட்டும் போக்கி காட்டுங்கள். உங்கள் ஆட்சியை பொற்கால ஆட்சி என்று போற்றப்படும்." என்கிறார்.

கூறியவன் ஒரு எளியவன்தானே என்று நினைக்காமல், அந்த குடிமகனின் கோரிக்கையை குறித்து கொள்ளுங்கள் என்று அங்கிருந்த அலுவலர்களிடம் ஆணையிடுகிறார்.

"கொடுமையிலும் கொடுமையான பசியை போக்க வேண்டும். உங்களுக்கு தெரியுமோ? தெரியாதோ? ஆனால், எனக்கு தெரியும் பசியின் கொடுமை.

என் ஆட்சியில் 'பாலாறு தேனாறு ஓடும்' என்றெல்லாம் சொல்ல மாட்டேன். ஆனால், மக்கள் பசிக் கொடுமையை அனுபவிக்க ஒருக்காலும் விடமாட்டேன்.

என் மக்கள், தினமும் அரிசி சோறு சாப்பிடுவதற்கான திட்டத்தை சொல்லுங்கள். அதற்கு ஆகும் செலவை சொல்லுங்கள். நிதி ஒதுக்கி தருகிறேன்.

என் மக்கள் பசிபோக்க அரிசி எங்கிருந்து கிடைத்தாலும் எப்பாடு பட்டாவது, வாங்கி வருகிறேன். உங்களுக்கு அரைமணி நேரம் அவகாசம் தருகிறேன். திட்டமிட்டு சொல்லுங்கள்" என்று மேசை மீது கிடந்த நாளிதழை எடுத்து புரட்ட ஆரம்பிக்கிறார் புரட்சித்தலைவர்.

அரைமணி நேரத்திற்கு பிறகு 'அந்த திட்டத்திற்கு ஆகும் செலவு' என்று ஒரு தொகையை சொல்கின்றார்கள் அலுவலர்கள். உடனே புரட்சித்தலைவர் அவர்கள் "இரண்டு மடங்காக்கி தருகிறேன்" என்று அந்த இடத்திலேயே ஆணையிட்டார்.

ஒரு எளிய குடிமகன் வைத்த கோரிக்கையை வேதமாக எடுத்து செயல்பட்டிருக்கிறார் மக்கள் திலகம். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தான் கிராமங்களில் சோளக்கூழை சாப்பிட்டு வந்த மக்களுக்கு அரிசி சோறு சாப்பிடும் வாய்ப்பு கிடைத்தது.







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் மாநாட்டில், பொதுத்துறை சார்பில் முதலமைச்சரின் குறைதீர்ப்பு பிரிவின் கீழ் வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்பட்டமைக்காக சிறந்த காவல் ஆணையருக்கான விருதினை முன்னாள் ஆவடி காவல் ஆணையர் திரு.கே.சங்கர் IPS அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

இணை ஆசிரியர்: K.மனோகரன், சென்னை.




திண்டுக்கல் M.V.M அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஒரு வார கால அறிமுக பயிற்சி திட்டம் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக SP திரு.ஜெயக்குமார் IPS அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் போதை பொருட்களுக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொண்டு, பெண்கள் பாதுகாப்பு, போக்சோ சட்டம் குறித்தும், சாலை விதிகளை கடைபிடிப்பது குறித்தும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

சிறப்பு நிருபர்: குரு.சரவணன், திண்டுக்கல்

## வென்றவனாவாய்...

**உன் சொல்லும் செயலும் உனக்கும் மனித குலத்துக்கும் பயனுள்ளதாக இருந்தால் வாழ்வு அர்த்தமுள்ளதாகும்.. இதை நீ உணர்ந்தால், வாழ்வை வென்றவனாவாய்...**

ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்



# போலீஸாருக்கு 8 மணி நேரப் பணி

## உள்துறை செயலர் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



தமிழகத்தில் போலீஸாருக்கு 8 மணி நேரப் பணி, பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு முறையை அமல்படுத்தக் கோரிய மனு தொடர்பாக மாநில உள் துறைச் செயலர் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு அண்மையில் உத்தரவிட்டது.

மதுரையைச் சேர்ந்த சத்யபிரியா சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு:

தமிழக காவல் துறையில் அதிக பணிச் சுமை உள்ளதோடு, ஓய்வின்றி பணியாற்ற வேண்டிய சூழலும் உள்ளது. இதனால், காவல் துறையினர் பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர். எனவே, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில், நிபுணர்கள் கொண்ட குழுவை அமைத்து, கடந்த 2010 முதல் 2025–ஆம் ஆண்டு வரை பட்டாலியன் காவல் துறையினருக்கென ஒதுக்கப்பட்ட நிதி, அவர்களின் செயல்பாடு தொடர்பாக விரிவான ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவும், அதனடிப்படையில் பட்டாலியன்களை சட்டம்–ஒழுங்கு காவல் துறையினரோடு இணைத்து பயன்படுத்துவது தொடர்பாக முடிவு எடுக்கவும் உத்தரவிட வேண்டும்.

மேலும், தமிழக காவல் துறையினருக்கான விதி அடிப்படையில், சில விதிவிலக்கு நாள்களைத் தவிர, பிற நாள்களில் 8 மணி நேரப் பணி, பயோமெட்ரிக் வருகைப் பதிவேடு முறையையும் அமல்படுத்த உத்தரவிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.பி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசுத் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் கோரினார். இதையடுத்து, இந்த மனு குறித்து தமிழக உள் துறைச் செயலர் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

முதன்மை ஆசிரியர்: மரு.கண்ணன், சென்னை.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக பெருங்குடி வளாகத்தில்

# மாணவர் விடுதி புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிய அமைச்சர் நிர்மல் குமார்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் சட்டப் பள்ளி மாணவர் விடுதி புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட அமைச்சர் நிர்மல் குமார் பேசியது:

"இத்தகைய சீர்மிகு கல்லூரி விடுதி கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டியதிலும், வளாகத்தில் மரக்கன்றை நட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான எங்கள் அரசின் உறுதியை வெளிப்படுத்தியதிலும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த கல்வி உள்கட்டமைப்பை வழங்குவதே அண்ணன் திரு.ச.ஜோசப் விஜய் அவர்களின் தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம்.

இந்தக் கட்டிடப் பணிகளின் தரத்தில் எந்த சமரசமும் இன்றி, விரைந்து முடிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அந்த இலக்கை முழுமையாக நிறைவேற்ற அரசு உறுதிபூண்டுள்ளது.

அன்பு மாணவ, மாணவியர்களே, நீங்கள் சிறந்த சட்ட வல்லுநர்களாகவும், சமூக நீதியைக் காக்கும் பொறுப்புள்ள குடிமக்களாகவும் உயர்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க என் மனமார்ந்த வாழ்த்துகள்." என்றார்.

துணை ஆசிரியர்: V.பிரபு, சென்னை.







*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை மற்றும் வனத் துறை அதிகாரிகள் மாநாட்டில், சிறப்பான மக்கள் காவல் பணிக்காக கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.R.ஸ்டாலின் IPS அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தார்கள்.*

தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், கன்னியாகுமரி.

# 71 முறை ரத்த தானம் செய்த திரு.எஸ்.இளம்செல்வனுக்கு பாராட்டு

நமது முயற்சி அமைப்பின் சார்பாக ரத்ததான தினத்தை முன்னிட்டு அதிக முறை ரத்த தானம் செய்த கொடையாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கம் வழங்கும் நிகழ்வு திருப்பூர் அரசு மருத்துவ மனையில் ஆட்சியர் மற்றும் தலைமை மருத்துவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது

இதில் நமது திருப்பூர் தீயணைப்பு நிலையத்தை சார்ந்த திரு.எஸ்.இளம்செல்வன் 71 முறை மேற்கு மண்டல அரசு ஊழியர்களில் அதிக முறை ரத்த தானம் செய்தமைக்காக பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் அதிக முறை ரத்ததானம் செய்து பரிசுகள் வழங்க தமிழக முதல்வர் அவர்களிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.





# #FMB

## உங்கள் நிலத்தையோ, மனையையோ அளக்கும் போது இதை கவனியுங்கள்...

நிலத்தை வைத்திருக்கும் உரிமையாளர் ஒரு நிலத்தையோ அல்லது மனையையோ அளக்க முற்படும் பொழுது, பெரும்பாலும் அந்த அளவுகளில் நமக்கு பல விஷயங்கள் புரிவதில்லை. குறிப்பாக நிலவரைபடம் FMB பற்றி தெளிவாக நமக்குத் தெரிவதில்லை. அது நமக்கு புரியாத ஒரு புதிராகவே இருக்கிறது. எனவே ஒரு நிலத்தை எப்படி அளக்க வேண்டும் என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் FMB எனப்படும் புல வரைபடத்தை பற்றி முதலில் நன்றாக தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்வே புல வரைப்படத்தில் கண்டிப்பாக தெரிந்து கொள்ள வேண்டிய 7 முக்கிய செய்திகள்:

1. ஒரு FMB யில் நிலத்தின் அளவுகள், உட்பிரிவு எண்கள், விளக்கிகள் அருகில் உள்ள சர்வே எண்கள் ஆகியவை இருக்கும்.
2. ஒரு சர்வே எண்ணின் எல்லை கோடுகளுக்கு பெயர் F லைன் என்று பெயர் (FIELD BOUNDARY LINE).
3. குறுக்கு விட்டமாக வரும் லைனுக்கு G லைன் என்று பெயர் அதாவது A யிலிருந்து D க்கு இவ்வளவு தூரம் என்று கணக்கிட்டு விடுவார்கள்.
4. மேலும் E யிலிருந்து B க்கும் விட்டமாக ஒரு லைனும் அதன் அளவும் போட்டு இருப்பர், அதுவும் G. லைன் ஆகும்.
5. இரண்டு G லைனில் ஏதாவது ஒரு கல் காணாமல் போனாலும் மற்ற G லைனை வைத்து காணாமல் போன கல் எங்கு இருக்க வேண்டும் என்று கண்டுபிடிப்பர்.
6. மீட்டர் கணக்கில் தான் FMB யில் அளவுகளை எழுதுவார்கள்.
7. ஒரே சர்வே எண்ணில் 15 ஏக்கருக்கு மேல் இருந்தால் 1:5000 என்றும், கொஞ்சம் குறைவாக இருப்பின் 1:2000 என்றும், மிகசிறிய நிலமாக இருந்தால் 1:1000என்றும் இருக்கும்.

**நிலத்தை அளக்கும் அளவு முறைகள்**

நிலத்தை அளக்கின்ற அளவீடுகள்! ஒவ்வொரு பகுதிகளில் ஒவ்வொரு அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றை நிச்சயமாக புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாடில் 3 அளவீட்டு முறைகள் பயன்படுத்தப் படுகின்றது.

1. பாரம்பரிய நாட்டு வழக்கு அளவீடுகள்: குழி, மா, வேலி, காணி, மரக்கா
2. பிரிட்டிஷ் வழக்கு அளவீடுகள் : சதுரஅடி, சென்ட், ஏக்கர் போன்றவை
3. மெட்ரிக் வழக்கு அளவுகள் : ச.மீட்டர், ஏர்ஸ், ஹெக்டேர்ஸ்

ஆனால் எல்லா பட்டா ஆவணங்களும் மெட்ரிக் அளவுமுறைகளில் ஏர்ஸ், ஹெக்டேரில் தான் இருக்கின்றன.

**நில அளவீடுகள்**

சென்ட் - 40.47 சதுர மீட்டர்
1 ஏக்கர் - 43,560 சதுர அடி
1 ஏக்கர் - 40.47 ஏர்ஸ்
1 ஹெக் - 10,000 சதுர மீட்டர்
1 சென்ட் - 435.6 சதுர அடி
1 ஏர்ஸ் - 100 சதுர மீட்டர்
1 குழி - 144 சதுர அடி
1 சென்ட் - 3 குழி
3 மா - 1 ஏக்கர்
3 குழி - 435.6 சதுர அடி
1 மா - 100 குழி
1 ஏக்கர் - 18 கிரவுண்டு
1 கிரவுண்டு - 2,400 சதுர அடி

தகவல்: குரு.சரவணன், திண்டுக்கல்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**

EMPIRE
together to grow!

இந்த பரபரப்பான நவீன உலகத்தில் கெமிக்கல் நிறைந்த உணவுகள், சத்து இல்லா உணவுகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாயத்தால் விளைந்த பொருட்கள் முதலியவற்றால் மனிதனுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருப்பதும் அதற்காக துணை உணவுகளை நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் உலகம் அறிந்த உண்மை. ஆகவே நாங்கள் அதுபோன்ற நல்ல, மக்களுக்கு தேவையான எளிதில் கிடைக்காத இயற்கை பொருட்களை அறிமுகப்படுத்த களம் இறங்கியுள்ளோம்,

மூலிகை மற்றும் வேதிப்பொருட்கள் இல்லா துணை உணவுப்பொருட்கள் (HERBAL FOOD SUPPLEMENTARY & HEALTH CARE PRODUCTS). வேதிப்பொருட்கள் இல்லா கலப்படமற்ற உணவுப் பொருட்கள் (FOOD PRODUCTS), வீரியமான வேதிப்பொருட்கள் பயன்படுத்தபடாத மூலிகை அதிகம் அல்லது முழுவதும் சேர்க்கப்பட்ட சொந்த பயன்பாட்டு பெருட்கள் (PERSONAL CARE), அழகுசாதன (BEAUTY CARE) பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் (HOME CARE), சுற்றுசுழலை பாதிக்காத (ECO FRIENDLY) கைவினை பொருட்கள் (HAND CRAFT) போன்ற மனிதனுக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்காத பொருட்களை மட்டுமே எம்பயர் மார்க்கெட்டிங் செய்கிறது என்பதனை உறுதியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துகொள்கிறேன்.

Nr. **B.BHARATHIRAJ** MCA.,
Managing Director, EMPIRE



## உடலில் ஏற்படக்கூடிய அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வளிக்கும் வேதிப்பொருட்கள் இல்லாத 100 சதவீத இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட துணை உணவுகள்.

SHOP NOW




ANCIENT+ MODERN FORMULA




பைல்லம் உமி (இஷப்கோல்) | கடுக்காய்
நன்நுண்ணுயிரிகள் (PROBIOTICS) | சிவதை வேர்

- உடல் நச்சுக்களை வெளியேற்றுகிறது
- மலச்சிக்கலை சரிசெய்கிறது
- குடல்பகுதியை சுத்தப்படுத்துகிறது
- குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது
- செரிமான சக்தியை அதிகரிக்கிறது
- கெட்ட கொழுப்பை குறைக்கிறது
- உடல் எடையை கட்டுப்படுத்துகிறது
- நல்ல பாக்டீரியாவை தருகிறது
- இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது

**உங்கள் இல்லத்திலிருந்தே எங்களது தயாரிப்புகளை பெறலாம்.**

**97 89 49 1438 | 766 755 1542**

Posted at - patrikachannel Egmore Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520




4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO